<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம் மேட்டூர்</u>

**C.C.No. 145/2020** **நாள் 12.09.2022**

**அ.சா.4 ரவி, த/பெ. வெள்ளையன்**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருக்கிறேன். நான் ஜலகண்டாபுரம் பேருந்து நிலையத்தில் டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு அ.சா.1 யின் கோழி எதிரியின் வீட்டு வழியாக சென்றதால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு சண்டை ஏற்பட்டதாக சொன்னார்கள். இதில் அ.சா.1 எதிரி அ டித்ததில் கீழே விழுந்து விலா எலும்பு உடைந்ததாகவும் மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்று சொன்னார்கள். போலிசார் என்னை ஜலகண்டாபுரம் அரசு மரத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்று பெருமாயியை பார்த்தேன். 108 க்கும் நான்தான் போன் செய்தேன். அடிப்பட்ட பெருமாயி என் உறவினர் என்றால் சரிதான். பெருமாயி வீட்டிற்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் குறித்து எனக்கு எப்படி தெரியும் என்றால் பெருமாயி கணவர் ஈஸ்வரன் எனக்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னார்.

2) நான் தான் போலிசாருக்கும் தகவல்சொன்னேன். நான் தகவல் சொன்னவுடன் போலிசார் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார்கள். போலிசார் மருத்துவமனைக்கு எடுத்து செல்லுமாறு சொன்னார்கள். நாங்கள் ஜிஉறச்சிக்கு எடுத்து சென்றோம். நான் கடையில் இருந்தே 108 க்கு நான்தான் தகவல் சொன்னேன். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் அடிப்பட்ட பெருமாயி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

ஒம்/– அ.க. பத்மபிரியா,
நீதித்துறை நடுவர் எண்.2 (கூ.மு.பொ)
மேட்டூர்.